# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.84/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரிமுத்து | Father's Name | : | ராஜதுரை |
| Village | : | முக்குளம் தர்காஸ் | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 58 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது முக்குளம் தர்காஸில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ராஜேந்திரன் என் உறவினர். 13.05.2009 ம் தேதி மாலை 6.00 மணிக்கு மேல் ராஜேந்திரன் வகையறாவிற்கும் சந்திரன் வகையறாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது. அவர்களுக்குள் அடித்துக் கொண்டார்கள், ராஜேந்திரனுக்கு காயம் ஏற்பட்டது. பட்டியல் சாட்சி 4 ராஜேந்திரன் மகன் மாரிமுத்து தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். காயம்பட்ட ராஜேந்திரன் இறந்து விட்டார்.

ராஜேந்திரன் மகன் வீரமணி, எங்கள் ஊரைச் சேர்ந்த பிரபாகரன் ஆகியோர் இயற்கை மரணம் அடைந்து விட்டார்கள். அடித்தவர்கள் யாரென்று எனக்கு தெரியாது, ஆஜரில் உள்ள எதிரிகள் அல்ல. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.05.2009 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் ராஜேந்திரன் மகன் வீரமணி மீது தமிழன் என்பவர் இருசக்கர வாகனத்தை மோதிவிட்டதால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது எனவும் அதன் காரணமாக இரவு 9.30 மணியளவில் எங்கள் ஊர் நால் ரோடு அருகே சந்திரன், கமலசிங்கம், துரைசிங்கம், அறிஞர் துரை, தமிழன், ராஜா, முத்துக்குமார், வரதராஜன் ஆகியோர் இங்கே வாங்கடா எவனா இருந்தாலும் பார்க்கலாம் என சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது ராஜேந்திரன் அவர் மகன் வீரமணி, பிரபாகரன், காமராஜ் ஆகியோர்களுடன் என்னங்கடா சத்தம் போடுறீங்க என்று கேட்டோம் எனவும் அப்போது கமலசிங்கம் தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி ராஜேந்திரன்

தலையில் வெட்டினார் எனவும் தமிழன் அருவாளால் ராஜேந்திரனின் வலது கையில் வெட்டினார், துரைசிங்கம் கம்பியால் ராஜேந்திரனின் காலில் அடித்தார் எனவும் வீரமணியை அறிஞர்துரை கம்பியால் வலது தோள்பட்டையில் அடித்தார் எனவும் தடுக்க சென்ற பிரபாகரனை துரைசிங்கம், தமிழன் ஆகியோர் கம்பியால் அடித்தார்கள் எனவும் என்னை வரதராஜன் தன் கையில் வைத்திருந்த கம்பியால் முதுகு, தொடை ஆகிய இடங்களில் அடித்தார் எனவும் கமலசிங்கம் அருவாளால் என் தொடையில் வெட்டினார் எனவும் பின் பாராளுமன்ற தேர்தலுக்காக போடப்பட்டிருந்த திமுக, அதிமுக, தேமுதிக ஆகிய கட்சிகளின் கொட்டகைகளை தீ வைத்து எரித்தார்கள் எனவும் பின் எதிரிகள் அனைவரும் எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களையும் இதுபோல் தீ வைத்து எரித்துவிடுவோம் என சொல்லி ஓடிவிட்டார்கள் எனவும் காயம்பட்ட எங்களை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.29 15:40:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.84/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கண்மணி | Father's Name | : | ராமையன் |
| Village | : | கருவாக்குறிச்சி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கருவாக்குறிச்சியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சந்திரன், ராஜேந்திரன் மற்றும் ஆஜர் எதிரிகளை ஆகியோரை தெரியும். அவர்களுக்குள் சண்டை என சொல்லிக்கொண்டார்கள், சண்டை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.05.2009 ம் தேதி மாலை 5.00 மணியளவில்

நானும் பக்கிரிசாமியும் திருவாரூர்-வடசேரி போகும் ரோட்டின் வளைவில் நின்று கொண்டிருந்தபோது எங்களுக்கு தென்புறம் தளிக்கோட்டையை சேர்ந்த சந்திரன் அவர் மகன்கள் துரைசிங்கம், அறிஞர்துரை, தமிழன், கமலசிங்கம் மற்றும் அதே ஊரைச் சேர்ந்த வரதராஜன், முத்துக்குமார், ராஜா ஆகியோர் ராஜேந்திரனும் அவர் மகனும் வீரமணியும் அடிக்கடி சண்டை போட்டு வருகிறார்கள் இன்று இரவுக்குள் அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் அவனை ஒழித்து கட்டினால்தான் ஊரில் நிம்மதி என பேசிக் கொண்டிருந்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.29 15:40:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.